துங்கனுக்குத் தங்கம்!

R. ஸ்டான்லி, 4 நவம்பர் 2021

முன்னர் பூரண சுவிசேஷ வாலிபர் ஐக்கியக்குழு (FGYMA) என்றழைக்கப்பட்ட ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM) 1977இல் தனது 7ஆம் ஆண்டில் பயணித்துக்கொண்டிருந்தது. எனது ஒரு சில உடன் ஊழியரோடு செப்டம்பரில் தமிழகத்தின் தென் மாவட்டக் கிளைகளை ஊக்குவிக்கச் சென்றிருந்தேன். அப்பொழுது K. E. டேனியல் என்ற மலையாளச் சகோதரன் BHELக்கு அருகிலுள்ள தனது காலி மனை

ஒன்றினை மிஷனரிப்பணிக்கென அன்பளித்தது என்னை அசைத்துவிட்டது. ''இதுபோன்று ஆதிச்சபையிலிருந்த தயாளச் செயல்கள் ஏராளம் தொடரட்டும்'' என்பதே எனது உடனடிப் பிரதிபலிப்பு (அப் 4:34,35). தசமபாகம் வாங்கியே பழகியிருந்த ஒரு லேவியனும் தீவிரமாய் வளர்ந்துவரும் திருச்சபையில் தேவையிலுள்ளோருக்குத் தனது நிலத்தை வழங்கிவிட்டார் (வச 36,37). பவுலடியாருடன் அவரும் முதல் வரிசை மிஷனரியாகிவிட்டதில் ஆச்சரியமில்லையே (13:2). ''பத்தில் பத்து'' (total) என்பதிலிருந்து ''பத்தில் பத்துக்கும் மேல்'' (total plus) என்று முன்னேறுவதற்குப் பதிலாக இன்றையத் திருச்சபையானது பழைய ஏற்பாட்டின் தரங்குறைந்த பழக்கமாகிய ''பத்தில் ஒன்று'' (tithe) என்பதற்குப் பின்வாங்கிவிட்டது! இப்பரிதாப நிலைக்காகப் பிச்சைக்காரப் பிரசங்கிமார் மீதே பழி சுமத்தவேண்டும். தேவ இராஜ்யத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாகத் தங்களது செல்ல விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான கட்டிடத் திட்டங்களின் மூலம் தங்களது சொந்த சாம்ராஜ்யங்களையே கட்டுவதில் இவர்கள் சிரத்தை மேற்கொண்டுள்ளனர். ''தேவனே, எங்கள்மீது இரக்கமாயிரும்!''

சகோதரன் K. E. டேனியல் அவர்களிடமிருந்தே நிலம் என்று முதல் காணிக்கையாக BYM பெற்றது. அவரைத் தொடர்ந்து பலர், அதிலும் குறிப்பாக ஏழைப் பழங்குடியினர், தொலைவிடங்களிலுள்ள மிஷனரிப் பணிக்களங்களில் பல நிலப்பகுதிகளை இறைப்பணிக்கு அர்ப்பணித்தனர். வேலூருக்கடுத்த இராணிப்பேட்டையில் BHELக்கு அருகிலிருந்த எனது இரு காலிமனைகளைக் காணிக்கையாகக் கொடுத்துவிட என்னை உந்தித்தள்ளியது இவ்விதத் தியாகச் செயல்களே. எனது வாழ்நாளில் நான் வாங்கிய நிலப்பகுதி இது ஒன்றே.

பிரிய கிறிஸ்தவ நண்பரே, எழுப்புதல் குறித்து எவ்வளவோ பேசுகிறோம். ஆதிச்சபையின் தரத்திற்குத் திரும்புவதேயன்றி வேறெதை எழுப்புதல் என்றழைக்க முடியும்? பழைய உடன்படிக்கையின் காலத்தில்கூட கர்த்தரது வேலைக்காகத் ''தேவைக்கும் அதிகமாய்'' மக்கள் பொருட்களைக் கொண்டுவந்தனரே (யாத் 36:5). ''போதுமானதற்கும் அதிகமாய்'' இருந்ததாம் (வச 7). யாத்திராகமம் 35:22ஐ வாசிக்கும்போதெல்லாம் நான் வெட்கமும் சவாலும் அடைகிறேன்: ''மனப்பூர்வமுள்ள பெண்டிர் மற்றும் ஆடவர் யாவரும் காதணிகள், மூக்குத்திகள், மோதிரங்கள், கழுத்தணிகள் ஆகிய தங்க நகைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தனர்.'' மக்கள் பெரும்பாலும் தலைவர்களையே

பின்பற்றுவர். தாவீது தனது சொந்தக் கருவூலத்திலிருந்து 3000 தாலந்து பொன்னைக் காணிக்கையாக்கிய பின்னரே, மனப்பூர்வமான தியாகக் காணிக்கைகளைக் கொண்டுவர மக்களுக்கு அவர் சவாலிட முடிந்தது (1 நாளா 29:3-5). அப்படியே, நெகேமியா காலத்தில் தலைவர்கள் 20,000 தங்க நாணயங்கள் கொடுத்தபோது, மக்களும் 20,000 தங்க நாணயங்கள் கொடுத்தனர் (நெகே 7:71,72). *''இராஜாதி இராஜன் இயேசு மகாராஜன்''* என்றெல்லாம் பாடுவது எளிது; ஆனால் இராஜாவுக்குத் தகுதியான தங்கத்துடன் அவரைக் கனப்படுத்தத் தவறுகிறோமே (சங் 72:11,15). தேவனைத் ''தொழுதுகொள்ள'' அல்ல, அவரிடமிருந்து ''பெற்றுக்கொள்ளவேண்டும்'' என்பதற்காகவே ''கொடுத்தலை'' உபதேசிக்கும் பிரசங்கிமார்மீது எனக்குக் கடுங்கோபம் வருகிறது. கேவலம்! பிரியமானவர்களே, கிறிஸ்துமஸ் வருகிறது. ''எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியுண்டாக்கும் நற்செய்தியைப்'' பரப்புவதற்குப் பயன்படும் வகையில் பெத்லகேமின் பாலகனைத் தங்கத்துடன் தொழுதுகொள்ள ஆயத்தப்படுங்கள் (மத் 2:11; லூக் 2:10). இதுவரை இல்லாத அளவு கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் உங்களுடையதாகும்!

2021 அக்டோபர் 31 அன்று தனது 90ஆம் பிறந்த நாளை பெங்களூரில் கொண்டாடிய சகோதரன் டேனியல் அவர்களுக்காய்த் தொலைபேசியில் ஜெபிக்கும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்ததையடுத்தே இக்கட்டுரையை அவரைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதத் தொடங்கினேன். அந்நிலத்தை அவர் BYMக்கு அன்பளித்த 1977ஆம் ஆண்டு அவருக்கு வயது 46. அப்பொழுது அவரது மகள் மெர்சிக்கு வயது 14,

மகன்கள் ஈஸோவுக்கு 11, மேத்யூவுக்கு 8. விருந்தோம்பலுக்கு, அதிலும் குறிப்பாய் இறைப்பணியாளரை உபசரிப்பதில், பெயர்பெற்றிருந்த அவரது அன்பு மனைவியார் 2018இல் தனது 77ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். வீட்டு ஜெபக்கூட்டமொன்றில் 1976ஆம் ஆண்டு அவர்கள் தனது தங்க நகைகளைத் துங்கனுக்குத் துதிபலியாக்கினார்கள். முதிர்வயதுப் பிரச்னைகள் தவிர்த்து, சகோதரன் நன்றாகவே இருக்கிறார். ஆரோக்கியமான ஆண்டுகளைத் தந்து தேவன் அவரை ஆசீர்வதிப்பாராக!

அன்புக்குரியவர்களே, துங்கனுக்குத் தங்கம் அல்லது நிமலனுக்கு நிலம் கொடுத்து அவரை வாழ்த்தி வணங்கிட இன்றே தீர்மானிக்கும்படி உங்கள் கரம்பிடித்து, உங்கள் கண்களைப் பார்த்து, உங்களை வருந்திக் கேட்கிறேன்!

R. Stanley, 13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943 (WhatsApp)
<stanleyonbible@hotmail.com> <evangelinestanley1@gmail.com>
www.StanleyOnBible.com ***YouTube: StanleyOnBible***